ஆத்தூரில

# போதை தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்




## பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு

**ஆத்தூர், ஆக.19:** ஆத்தூரில் தன்னார்வ தொண்டு அமைப்பு சார்பில், நேற்று போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் என மூன்று பிரிவுகளாக நடந்த போட்டிகளில், சேலம், ஆத்தூர், கடலூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், திருச்சி, ஓசூர், கோவை, மகாராஷ்டிரா, டில்லி உள்ளிட்ட பகுதியிலிருந்து 1,050 பேர் பங்கேற்றனர். ராணிப்பேட்டை பயணியர் மாளிகை முன் மாரத்தான் போட்டியை, ஆத்தூர் தொகுதி எம்எல்ஏ ஜெயசங்கரன் மற்றும் டிஎஸ்பி சதீஷ்குமார் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். போட்டியில் கலந்து கொண்டோர் ராணிப்பேட்டை, கடை வீதி, பழையபேட்டை, புதுப்பேட்டை, காமராஜர் சாலை ரயிலடி தெரு, விநாயகபுரம், உடையார்பாளையம் வழியாக, 7 கி.மீ., தூரம் பயணியர் மாளிகை வந்தடைந்தனர்.

இதில் ஆண்கள் பிரிவில் மகாராஷ்டிராவை சேர்ந்த பிரமோத்குமார் முதலிடம் பெற்று ₹15,000 ரொக்க பரிசு பெற்றார். ஓசூரை சேர்ந்த கோவிந்தராஜ் 2ம் இடம் பெற்றார். சேலத்தை சேர்ந்த ரஞ்சித்குமார் 4ம் இடம் பெற்றார். பெண்கள் பிரிவில், சேலம் ஜலகண்டாபுரத்தை சேர்ந்த லதா, முதலிடம் பெற்று ₹15 ஆயிரம் ரொக்கப் பரிசு பெற்றார். சேலத்தைச் சேர்ந்த மீனாட்சி 4ம் இடம் பெற்றார்.

மாற்றுத்திறனாளிகள் பிரிவில் ஆத்தூரை சேர்ந்த மகேஸ்வரி முதலிடம், சின்னதுரை 2ம் இடம் பெற்றனர். முன்னதாக, மாரத்தான் போட்டியில் பங்கேற்ற வீரர்கள் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# நகரமைப்பு அலுவலர்கள் சங்க